சக்தி பௌண்டேஷன் - தமிழ் வகுப்பு
சுந்தரர் தேவாரம்.
ஸ்தலம்: கோவைக்கு அருகில் உள்ள அவினாசி.
இறைவன்: அவினாசிலிங்கேஸ்வரர் என்ற அவினாசியப்பர்
அம்மை: கருணாலயச்செல்வி என்ற கருணாம்பிகை

பலன்: இழந்த நல்ல காலத்தை மீண்டும் பெறலாம், இழந்த வாழ்க்கையை மீண்டும் மறுமலர்ச்சி ஏற்பட வைக்கலாம்.

1.எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்
புற்று ஆடு அரவா புக்கொளியூர் அவினாசியே!
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே!

2.வழி போவார் தம்மோடும் வந்து உடன் கூடிய மாணி நீ
ஒழிவது அழகோ? சொல்லாய்! அருள் ஓங்கு சடையானே!
பொழில் ஆரும் சோலைப் புக்கொளியூரில் குளத்து இடை
இழியாக் குளித்த மாணி என்னைக் கிறி செய்ததே!

3.எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறை கொண்டு ஆறலைப்பார் இலை
பொங்கு ஆடு அரவா! புக்கொளியூர் அவினாசியே!
எம் கோனே! உனை வேண்டிக் கொள்வேன் பிறவாமையே!
[இந்தப் பாடலை மனமுருகி ஓத, எங்கே சென்றாலும் இருக்க இடம்,உடை, உணவு, நட்பு கிடைக்கின்றன.]

4.உரைப்பார் உரை உகந்து உள்க வல்லார் தங்கள் உச்சியாய்!
அரைக்கு ஆடு அரவா! ஆதியும் அந்தமும் ஆயினாய்!
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவினாசியே!
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே!
[முதலை என்ற காலம் மீண்டும் நல்ல காலமாக நமக்கு வர வேண்டும், இழந்த பொற்காலம் திரும்ப வேண்டும்]

5.அரங்கு ஆவது எல்லாமாய் இடுகாடு அது அன்றியும்
சரம் கோலை வாங்கி வரிசிலை நாணியில் சந்தித்துப்
புரம் கோட எய்தாய் புக்கொளியூர் அவினாசியே!

குரங்கு ஆடு சோலைக் கோயில் கொண்ட குழைக் காதனே!

6.நாத்தானும் உனைப் பாடல் அன்றி நவிலாது எனா
சோத்து என்று தேவர் தொழ நின்ற சுந்தர சோதியாய்!
பூத்தாழ் சடையாய் புக்கொளியூர் அவிநாசியே!
கூத்தா! உனக்கு நான் ஆட்பட்ட குற்றமும் குற்றமே!

7.மந்தி கடுவனுக்கு உண் பழம் மலைப்புறம்
சந்திகள் தோறும் சலம் புட்பம் இட்டு வழிபட
புந்தி உறைவாய் புக்கொளியூர் அவிநாசியே!
நந்தி உனை வேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே!

8.பேணாது ஒழிந்தேன், உன்னை அல்லால் பிற தேவரைக்
காணாது ஒழிந்தேன், காட்டுதியேல் இன்னம் காண்பம் நான்
பூண் நாண் அரவா! புக்கொளியூர் அவிநாசியே!
காணாத கண்கள் காட்ட வல்ல கறைக்கண்டனே!

9.நள்ளாறு தெள்ளாறு அரத்துறைவாய்! எங்கள் நம்பனே!
வெள்ளாடை வேண்டாய், வேங்கையின் தோலை விரும்பினாய்
புள் ஏறு சோலைப் புக்கொளியூரில் குளத்து இடை
உள் ஆடப் புக்க மாணி என்னைக் கிறி செய்ததே!

10.நீர் ஏற ஏறு நிமிர் புன்சடை நின்மல மூர்த்தியைப்
போர் ஏறு அது ஏறியை, புக்கொளியூர் அவிநாசியைக்
கார் ஏறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய
சீர் ஏறு பாடல்கள் செப்ப வல்லார்க்கு இல்லை துன்பமே!

திருச்சிற்றம்பலம்!!!